**தெஹிவல கல்கிஸ்ஸ மா நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஜூன் 01 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூன் 30 ஆந் திகதி சபையின் நகர பிதாவுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து தெஹிவல கல்கிஸ்ஸ மா நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலவச புகையிரத அனுமதிப்பத்திரத்திற்காக முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 439,415 தொகை குறைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வருமான பதிவேடுகளின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சாக்கடை பவுசர் சேவை வருமானம் ரூபா 297,921 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களில் அதனை ரூபா 39,000 தொகை எனக் கணக்கீடு செய்திருந்தமையால் 2015 ஆண்டிற்கான சாக்கடை பவுசர் சேவை வருமானம் மற்றும் சாக்கடை பவுசர் சேவை கடன்பட்டோர் மீதி ரூபா 258,921 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து நன்கொடை ஒன்றாக 2012 செப்தெம்பர் 13 ஆம் திகதி கிடைத்திருந்த 02 டிமோ பட்டா வாகனங்களை 2015 ஒக்தோபர் 12 ஆம் திகதி சபைக்கு உரித்தாக்கியிருந்த போதிலும் அவற்றின் பெறுமதியினை மதிப்பீடு செய்து நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. உரிய காலத்திற்கான பெறுமானத் தேய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) (i) 2012 ஜனவரி 29 ஆந் திகதி உள்ளூராட்சித் திணைக்களத்தினால் சபைக்கு வழங்கியிருந்த ரூபா 3,178,227 தொகை பெறுமதியான கப் வண்டிற்காக 2014 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் (மேல் மாகாணம்) கடிதத்தத்தின் அறிவுரைகளின் பிரகாரம் கப் வண்டியின் செலுத்த வேண்டிய 04 தவணைப் பணங்களின் பெறுமதியாகிய ரூபா 353,136 தொகையினை செலுத்த வேண்டியவை என கணக்கீடு செய்யப்படாமையினால் நிதிக்கூற்றுக்களில் அறவிடப்படக் கூடிய துணைச்

சேவைக் கணக்கு மற்றும் மாகாண சபைக் கடன் கணக்கு அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ii) அதே போல் மேற்கூறிய கடிதத்தின் அறிவுரையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரை தவணைப் பணமாக செலுத்தியிருந்த ரூபா 2,825,091 தொகை கப் வண்டியின் பெறுமதியென கணக்கீடு செய்யாமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மோட்டார் வாகனக் கணக்கு மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கு அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டு திசெம்பர் மாதத்திற்காக பெற வேண்டிய களியாட்ட வரி ரூபா 289,234 தொகையினை கணக்கீடு செய்யப்படாமையால் அதே தொகையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் களியாட்ட வரி கடன்பட்டோர் கணக்கு மீதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 366,504,545 இற்கான 12 கணக்கு விடயங்கள் தொடர்புடைய மீதிகள் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கஞ் செய்யும் போது நிதிக்கூற்றுக்களின் குறைவாகக் காட்டுதல் ரூபா 476,728 தொகையும் மிகையாகக் காட்டப்படல் ரூபா 3,472,142 தொகையும் காணப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பேரேட்டின் பிரகாரம் பெற வேண்டிய பலவின வருமான நிலுவை மீதி ரூபா 151,832,233 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களில் அவை ரூபா 147,774,426 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,057,807 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போது இந்த வித்தியாசம் நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டன என கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் அவற்றை சரிசெய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**1.3.3 பெற வேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வாகனங்கள், இடர் மற்றும் விஷேட ஆகிய கடன் வகைகளை கொண்ட ஊழியர் கடன் மீதி ரூபா 3,485,636 ஆகக் காணப்பட்டதுடன் இந்த கடன் மீதி ஒரு வருடத்தை மிகைத்த காலம் அறவிடப்படாமல் காணப்பட்டது.

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகள் தொடர்பாக நிலுவை அங்கத்தவர் படி ரூபா 7,021,000 தொகை 2016 ஏப்ரல் 29 திகதி வரை மீளளிப்புச் செய்திருக்கவில்லை.

(இ) பெற வேண்டிய பலவினக் கடன் நிலுவையில் 2014 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் இறைச்சிக் கடை நிலுவை வாடகை தொகையாகிய ரூபா 2,356,017 இனை இனங்கண்டு அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

இலங்கை மின்சார சபையில் இருந்து கிடைக்க வேண்டிய கணக்கு ஒன்றென நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 10,854,144 தொகை தொடர்பாக உரிய உடன்படிக்கைகள், மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள், சபையினால் அனுப்பப்பட்ட ஞாபகப்படுத்தும் கடிதங்களுக்கு அனுப்பியிருந்த பதில்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 312,450,626 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 297,508,403 தொகையாகும்.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை,**

(i) 177(1) இன் பிரகாரம் சேகரிக்கப்பட்ட வருமானம் நாளாந்தம் அல்லது கூடிய விரைவில் வங்கியில் இடப்பட வேண்டுமெனினும் இரத்மலான நாளாந்த சந்தையின் நாளாந்தம் சேகரிக்கப்படும் ரூபா 288,240 இற்கான சந்தைக் கட்டணம் அவ் அலுவலரினால் மாதத்திற்கு ஒரு முறை சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ii) 188(2) க்கு 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வைப்புச் செய்த ஆனால் தேறப்படாத ரூபா 48,683 இற்கான 05 காசோலைகள் மற்றும் 02 காசுக் கட்டளைகள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 371(5) இன் பிரகாரம் முற்பணம் பெற்றுக்கொண்ட ஆண்டில் திசெம்பர் 31 திகதி அல்லது அத் தினத்திற்கு முன்னர் அம் முற்பணங்கள் தீர்க்க வேண்டுமெனினும் முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் தீர்க்கப்படாத கூட்டுத்தொகை ரூபா 1,129,663 இற்கான முற்பண மீதியொன்று காணப்பட்டது.

(iv) 396(ஈ) இன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 06 மாதங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 813,945 தொகையாக வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 14 காசோலைகள் தொடர்பாக 2016 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(v) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571 இன் பிரகாரம் வைப்புக்களின் காலவரையறை 02 வருடங்கள் நிறைவடைந்த வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும், 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அவ்வாறு செலவு வைக்கப்படாத வைப்புக்களின் தொகை ரூபா 29,787,383 தொகையாகும்.

(vi) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள ரூபா 72,021,920 தொகையான பலவின வைப்புக்கள் மீதியில் கூட்டுப்பெறுமதி ரூபா 2,315,002 தொகைக்கான வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்துள்ள 374 காசோலைகள் தொடர்பாக இலங்கை குடியரசின்

நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் திருப்பி செலுத்த வேண்டிய பலவின வைப்புக்கள் வைப்புக் கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக நகர பிதாவின் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உள்ளவாறான வருமானங்கள் மற்றும் நிலுவை வருமானங்கள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| | 2015 | | | | 2014 | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | உள்ளவாறான அறவிடப்பட வேண்டியவை | உள்ளவாறான அறவிடப்பட்டவை | ஆண்டிற்கான நிலுவை | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை | உள்ளவாறான அறவிடப்படவை | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரியும் வரியும் | 364,509 | 200,449 | 164,060 | 344,899 | 339,880 | 334,643 |
| வாடகை | 17,299 | 12,894 | 4,405 | 9,874 | 16,973 | 7,622 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 25,813 | 19,699 | 6,114 | 21,916 | 39,027 | 19,193 |
| ஏனைய வருமானங்கள் | 355,081 | 96,745 | 258,336 | 540,710 | 462,188 | 464,006 |

### 2.3.2 வீதவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர பிதாவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானத் தகவல்களின் பிரகாரம் மீளாய்வு நிதிக்கூற்றின் பிரகாரம் ஆண்டிற்கான வீதவரி வருமானம் ரூபா 355,679,879 தொகையாக இருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 163,386,678 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு வீதவரி கடன்பட்டோர் மீதி ரூபா 330,731,850 தொகையாகக் காணப்பட்டதுடன் அத் தொகையில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 208,518,437 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்படும் ரூபா 341,029,268 இற்கான நிலுவை வீதவரி மீதியில் ரூபா ஒரு மில்லியனை விட கூடிய நிலுவை வீதவரி மீதி காணப்படும் 36 இடங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் இருந்து அறவிடப்பட வேண்டிய வீதவரி மீதி ரூபா 69,466,965 ஆகக் காணப்பட்டது.

(ஈ) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 240 பிரிவின் பிரகாரம் வதிவிடம் மற்றும் ஏனைய காரணங்களை கவனத்தில் எடுத்து 2014 செப்தெம்பர் 05 திகதி மா நகர சபை தீர்மான இலக்கம் 08(01xஅ) 74 இன் கீழ் ரூபா 11,431,669 இற்கான வீதவரி தொகையொன்று பதிவழிக்கப்பட்டிருந்தது. வதிவில்லாத ஆதனங்களின்

வீதவரி கழிக்கும் போது குறிப்பிட்ட இடம் வதிவற்ற நிலையில் உள்ளது என வருமானப் பரிசோதகரின் வெளிக்களப் பரிசோதகர் அறிக்கையொன்று பெறப்பட வேண்டும். எனினும் 3 வட்டாரங்களைச் சேர்ந்த 13 வரி அலகுகளில் ரூபா 248,281 தொகையான வீதவரியினை பதிவளிக்கும் போது அவ்வாறு வெளிக்களப் பரிசோதனை அறிக்கை பெற்றிருக்கவில்லை.

(உ) வட்டார இலக்கம் 14, பள்ளி தொர பாதை 105 ஆம் இலக்க ஆதனத்தில் 2002 ஆண்டு தொடக்கம் 2008 திசெம்பர் 31 வரை அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 4,380,683 தொகையான நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக 2009 மார்ச் 04 ஆம் திகதி இறுதி அறிவித்தல் ஒன்று சபையினால் அனுப்பப்பட்டிருந்ததுடன் அதற்கு பதிலாக குறிப்பிட்ட நிறுவனத்தனிால் 2009 மார்ச் 26 ஆம் திகதி வீதவரி செலுத்துவதற்கு இயலாது என அறிவித்திருந்தார். சபையினால் அனுப்பப்பட்டிருந்த இறுதி அறிவித்தலின் பிரகாரம் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாயினும் இது தொடர்பாக 2013 செப்தெம்பர் 13 திகதி நகர ஆணையாளர் மற்றும் நகர கணக்காளரி (வருமானம்) னால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் “2003 முதல் 2009 வரையாக இந்த நிறுவனத்தின் நிலுவை வீதவரியாக ரூபா 3,710,584 இற்கான தொகையை குறைப்பதற்கு அல்லது பதிவழிப்பதற்காக சட்டரீதியாக இயலாது என்ற” விதப்புரை மீது கவனம் செலுத்தாமல் 2014 பெப்ரவரி 07 திகதிய பொதுக் கூட்டத் தீர்மான இலக்கம் 08(9 ஆ) 01 பிரகாரம் இந்நிறுவனத்தினால் 2003 முதல் 2012 வரை செலுத்த வேண்டியிருந்த வீதவரித் தொகையில் 1/5 தொகை மாத்திரம் அதாவது ரூபா 886,200 தொகையினை அறவீடு செய்வதற்கும் மீதி 4/5 தொகையை சமபங்குகளாக குறைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

### 2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) (i) 2014 செப்தெம்பர் 19 திகதிய இலங்கை குடியரசு வர்த்தமானி அறிவித்தலின் iv(ஆ) பகுதியில் காட்டப்பட்டுள்ளவாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வியாபாரங்களும் வருடாந்த பெறுமதியின் மீது உரிய கட்டணத்தை செலுத்தி வர்த்தக அனுமதிப்பத்திரம் ஒன்றினை பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும், 2015 திசெம்பர் 31 திகதி வரை வர்த்தக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலையங்கள் 1285 காணப்பட்ட போதிலும் சபையினால் இது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ii) சபையினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமல் அனுமதிப்பத்திரக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 73 ஆக இருந்ததுடன் அனுமதிப்பத்திரம் இன்றி வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2008 பெப்ரவரி மாதம் முதல் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரம் நகர சபைக்கு சாட்டப்பட்டிருந்ததுடன் சபையினால் வழங்கப்படும் அந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் 3 வருடங்களாகும். எவ்வாறாயினும் 12 வர்த்தக நிறுவனங்களினால் இந்த அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த போதிலும் அதனை புதுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் இது தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) (i) மீளாய்வாண்டிற்கான வர்த்தக வரி வருமானம் என ரூபா 15,000,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2015 ஆண்டிற்காக ரூபா

11,638,580 தொகைக்கு சிட்டையிடப்பட்டிருந்தது. அவற்றில் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 8,618,830 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

(ii) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 16,234,038 இற்கான வர்த்தக வரி கடன்பட்டோர் மீதியில் இருந்து மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 12,839,538 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

### 2.3.4 குப்பைக் கட்டணம்

2013 நவம்பர் 18 திகதிய 08(10)35 இலக்கம் கொண்ட சபை தீர்மானம் மற்றும் நிதிக் குழுவின் அறிவுரையின் பிரகாரம் நிலுவை குப்பைக் கட்டணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமையால் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை குப்பைக் கட்டணம் ரூபா 3,302,101 தொகையாகக் காணப்பட்டதுடன் சபையினால் குப்பைகள் அகற்றப்படும் வர்த்தக நிலையங்கள் மற்றும் சபை இடையே உடன்படிக்கை சார் பொறுப்பு ஒன்று ஏற்படுத்திக்கொண்டிருக்காமையால் நிலுவை குப்பைக் கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாதுள்ளது.

### 2.3.5 முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டிற்காக ரூபா 155,000,000 இற்கான வருமானம் ஒன்று பாதீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ஆண்டின் போது எதுவித தொகையும் கிடைத்திருக்கவில்லை. முத்திரைக் கட்டண வருமானம் பற்றிய தகவல்கள் உரிய பதிவாளர் அலுவலகங்களுக்கு சென்று பெற்றுக்கொள்ளாமையால் 2015 ஆண்டிற்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் தொடர்பாக சரியான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப் பண வருமானம்

சபையினால் 2015 ஆண்டிற்காக நீதிமன்றத் தண்டப் பண வருமானம் என ரூபா 22,500,000 இற்கான தொகை பாதீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது உள்ளவாறான வருமானம் ரூபா 100,481 தொகை அதாவது மதிப்பீட்டு வருமானத்தில் 0.4 சதவீதம் மாத்திரம் காணப்பட்டது. 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகள் தொடர்பாக பெற வேண்டியிருந்த ரூபா 116,173,231 தொகையான நீதிமன்றத் தண்டப்பண நிலுவை வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 1994 இன் 04 ஆம் இலக்க நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் தண்டம் விதிக்கும் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த தண்டப் பணத்தை அறவீடு செய்யப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 திகதி முதல் 05 வருடங்களுக்குள் மாத்திரம் அந்தத் தண்டப் பணம் அறவிடப்பட்ட நீதிமன்றத்தில் பதிவாளரினால் அல்லது அவரினால் பெயர் குறிப்பிட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுபடுத்திய ஆவணங்களுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு சமர்ப்பித்திருக்கவில்லை.

### 2.3.7 கடை வாடகை

(அ) கடை வாடகை உடன்படிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 07 கடைகள் வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமல் வர்த்தக நடவடிக்கைகள் செய்யப்பட்டிருந்தன. அத்துடன் 05 கடைகளில் ஒப்பந்த காலம் முடிவடைந்த வாடகை உடன்படிக்கைகளுக்காக புதிதாக உடன்படிக்கைகள் கைச்சாத்திடல் அல்லது இற்றைவரைப்படுத்தலுக்கு நடவடிக்கை எடத்திருக்கவில்லை.

(ஆ) கடைகளில் நீண்ட காலம் முதல் அங்கீகாரம் இன்றி வதிவோரை அகற்றுவதற்காக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கடை உரிமையாளர்களுடன் சபை மேற்கொள்ளும் வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் சபையின் அங்கீகாரம் இன்றி கடைகளில் துணை வாடகைக்கு கொடுத்தல் கூடாது எனினும் சில கடைகள் துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குப்பைகளை அகற்றுதல் தொடர்பாக சபை மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை (மேல் மாகாணம்) இடையே காணப்பட்ட உடன்படிக்கையை 2014 திசெம்பர் 31 திகதி முடிவடைந்திருந்த போதிலும் 2016 மார்ச் 31 திகதி வரை இவ்வுடன்படிக்கை இற்றைவரைப்படுத்துவதற்காக அல்லது புதிய உடன்படிக்கை ஒன்று மேற்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கரதியான கழிவுப்பொருள் அலகுக்கு குப்பைகளை அகற்றும் போது சபைக்கு சொந்தமில்லாத வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்ட குப்பை 438 தொன்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 266,813 இற்கான தொகையொன்று கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ அதிகார சபைக்கு செலுத்தப்பட்டுள்ளது.

### 3.2 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

(அ) மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்றும் உத்தியோகத்தர்களுக்கு சீருடைகள் வழங்குவதற்காக 2015 ஆண்டின் போது ரூபா 235,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அச் செலவுகள் மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 188(1) ''அ'' முதல் ''த'' வரையான செலவுகள் செலவுகளின் மூலம் அணவல் செய்யப்படவில்லை.

(ஆ) 2012 ஜூலை 11 திகதிய டப்ளியூ.பீ/எல்/ஜீ.டீ/2012 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் (மே.மா) சுற்றறிக்கையின் (xiii) ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் திட்டமிடல் குழுவில் அடங்க வேண்டியவர்கள் பற்றி காட்டியிருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் திட்டமிடல் குழுவிற்கு சமுகமளித்தலுக்காக அலுவலக உதவியாளர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 184,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 128 இன் பிரகாரம் நிதிக் கட்டுப்பாடு ஒன்று பேணப்பட வேண்டும் எனினும் அவ்வாறு செய்யாமையால் மீளாய்வாண்டு பெப்ரவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை இடையிடையே சபையின் நடைமுறைக் கணக்கில் இருந்து ரூபா 102,949 முதல் ரூபா 53,635,988 வரையான வீச்சில் வங்கி மேலதிகப்பற்று ஒன்று பேணப்பட்ட காரணத்தினால் ரூபா 211,792 தொகை மேலதிகப் பற்று வட்டி என செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் போது வருமானம் மற்றும் செலவுத் தலைப்புகள் இடையே நிதியேற்பாடுகள் மாற்றப்பட்ட பின்னரும் பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்

மற்றும் செலவுகளில் 01 சதவீதம் முதல் 98 சதவீதமான முரண்கள் காணப்பட்ட 17 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு வினைத்திறனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 66 செலவு விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட ரூபா 25,843,000 இற்கான தொகையில் மீளாய்வாண்டின் போது செலவுகள் ஏதும் மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) 07 வருமானத் தலைப்புகளின் கீழ் 11 வருமான விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட ரூபா 168,575,000 இற்கான வருமானங்களில் மீளாய்வாண்டின் போது வருமானம் ஏதும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது ஆரம்பிப்பதற்காக திட்டமிட்டிருந்த 04 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 1,260,000 இற்கான தொகையொன்று கடன்கொடுத்தோர் என ஏற்பாடு செய்யப்பட்டு மீளாய்வாண்டிற்காக வருமானச் செலவுக் கணக்கிற்கு எதிராக செலவு ஒன்றென காட்டப்பட்டிருந்த போதிலும் 2016 ஏப்ரல் 30 திகதி வரை இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு எதிர்ப்பார்த்த நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் 06 மாதங்கள் முதல் 18 வரை காலவீச்சில் இருந்து பழுதுபார்த்தல் செய்ய வேண்டிய நிலைமையில் செயற்படாது காணப்பட்டதுடன் 2016 ஜுன் 09 திகதி வரை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2003 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 65,000 பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்றும் 1999 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 9,248,274 பெறுமதியான புல்டோஸர் வண்டி ஒன்றும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட போதிலும் அவற்றை பழுதுபார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 தீர்க்கப்பட்டிருந்த மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்ட 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக 2016 மே 31 திகதி வரை பதில்/ விடயத்தை விளக்குதல் அளித்திருக்கவில்லை. அத்துடன் அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடல் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 8,284,031 தொகையாகும். கடந்த 04 ஆண்டுகளின் போது வழங்கிய கணக்காய்வு ஐய வினாக்களில் 08 இற்கு மேற்கூறிய திகதி வரை பதில் அனுப்பியிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) அகக் கணக்காய்வு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) வருமான நிருவாகம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு